# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 193/மா/2023**
**நாள் : 07.08.2023**

திரு. ரிச்சர்ட் ஆலன்,
பெரம்பூர், சென்னை – 11. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 6, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, பெரம்பூர், செம்பியம், சங்கர மடம் தெரு, எண்.12/12 என்ற முகவரியில் வசிக்கும் திரு. ரிச்சர்ட் ஆலன் என்பவரின் 13.06.2023 நாளிட்ட மனு 03.07.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 193/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, பெரம்பூர், செம்பியம், சங்கர மடம் தெரு, எண்.12/12 என்ற முகவரியில் வசிக்கும் திரு. ரிச்சர்ட் ஆலன் என்பவர் தனது 13.06.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

"Kalidas has been 'kind of doing a good job and was very polite but whenever I ask him to fine the residents who are throwing garbage on the Sankaramadam Street, he is always giving excuses and saying that "Sir, namma yenna panna mudiyum? Makkalaa thirundhra varaikum namma onnum panna mudiyaadhu sir, etc. Then I told him to get the help of the Police to implement the collection of fine from residential violators.

Ever since then he seems to be wilfully getting into arguments with me Sir, When on the phone with him, he was saying things that I had never mentioned or were not true, Sir, Then I did not say anything because he is a Government official and I need his help to keep the Street and Division clean.

But on the next occasion, when I called him, I was politely asking for his availability to distribute pamphlets in the street and conduct an awareness campaign since some residents were recklessly and wilfully throwing garbage at various points on the street. During the course of the conversation, he started

arguing with me. Since I was not able to hear him properly because he was travelling by train, I asked him if he would be free to talk soon after he got down from the train and for that he started arguing with me, saying that I am interfering in his personal matters, etc. I had not asked him anything personal Sir, I just wanted to know if he would be free to discuss matter after 30 minutes after getting down from the train (since he was not audible enough) and for that he was quite argumentative and absolve.

I also spoke to an advocate and TN State Legal Services Authority and they told me that it is the duty of the Corporation to address the issue to the neighbours throwing garbage in front of our premises and in other places and not the police. Because of his lackadaisical attitude and non-adherence to rules, we are having to approach the police and are facing a lot of stress/pressure and difficulty on account of that.

Kindly request you to transfer him to some other Division and grant us an efficient Conservancy Inspector who would discharge his duties effectively and keep the place super clean and disease free and also if possible check/punish those people who litter the street and public places in our division.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 26.07.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 11.07.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 26.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மேற்கண்ட முகவரியில் வசித்து வரும் நான், எனது குடியிருப்பு அமைந்துள்ள இடத்திற்கு வெளியேயும், எதிரிலும் தெருவில் வசிக்கும் மக்கள் குப்பைகளை கொட்டுவது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–6ல் என்னால் புகார் அளிக்கப்பட்டது. குறிப்பாக அம்மண்டலத்தின் துப்புரவு மேற்பார்வையாளரிடம் தொலைபேசியிலும், நேரிலும் புகார் தெரிவித்தும் எனது புகாரின் மீது எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கு மாறாக என்னுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு தனது பணியை சரிவர செய்யாமலும் விதிகளை பின்பற்றாமலும் இருந்து வருகிறார்.

சமூக ஆர்வலரான நான், நான் வசிக்கும் தெருவில் குப்பைகள் கொட்டுவதை தடுத்து தெருவை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைப்பதற்கும் விரும்பிய காரணத்தால்தான் இவ்வாறு புகார் மனுக்களை அனுப்பினேன். வேறு எதுவும் தனிப்பட்ட காரணங்களினால் அல்ல. எனவே, எனது குடியிருப்பு அமைந்துள்ள தெருவில் குப்பைகளை சேகரம் ஆகாமல் தினமும் அகற்றிடவும், மேலும் குப்பைகளை சுகாதாரப் பணியாளர்களிடமே தெரு மக்கள் வழங்கப்படவேண்டும் என மாநகராட்சியால் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மேலும் மேற்கண்ட துப்புரவு மேற்பார்வையாளர் தனது பணியை திறம்பட செய்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும்

Just as the Corporation Staff are for the people, I am also for them. I don't want them to suffer and struggle to do their work. They must be happy to do their work (with interest).

The transfer requested in my petition dated 27.6.2023 is also is only for his benefit. He has to travel for duty from Thiruvallur for duty. If he given a job nearer his residence will be easier for him (if he agrees.)"

மேலும் எனது 27.6.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6-ன் உதவி செயற் பொறியாளர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் 26.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர்.**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6 பெரம்பூர் செம்பியம் பகுதியில் அமைந்துள்ள சங்கரமடம் தெருவில் அங்குள்ள குடியிருப்புகளில் சேரும் குப்பையை மாநகராட்சி வாகனம் மூலம் சேகரிக்கப்பட்டு பின்னர் அதனை தரம் பிரித்து அனுப்பப்படுகின்றன. மனுதாரர் தனது வீட்டிற்கு எதிரில் உள்ள வீட்டில் வசிப்பவர்கள் அவர்களின் வீட்டின் வாசலிலேயே குப்பையை வைத்திடுவதாகவும், அது தங்களுக்கும், தெருவில் செல்லும் மக்களுக்கும் இடைஞ்சலாகவும் உள்ளது என தெரிவித்து புகார் அளித்ததைத் தொடர்ந்து மேற்கண்ட தெருவில் குப்பைகள் சேராமல் அடிக்கடி அகற்றும்பொருட்டு ஒவ்வொரு வீட்டிலிருந்தும் அவ்வீட்டின் குப்பைகளை மாநகராட்சி வாகனத்தில் சேகரித்து, அதனை வேறு இடத்தில் கொட்டுவதற்கு மாநகராட்சியால் தினமும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தையும், மேலும் மேற்கண்ட தெருவில் குப்பைகள் தேங்காமல் இருந்திட அத்தெருவில் விழிப்புணர்வு பிரச்சாரம் ஒலிபெருக்கி மூலம் செய்யப்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் மாநகராட்சி விதிகளை பின்பற்றாமல் தங்களது வீடுகளுக்கு முன்பு குப்பைகளை கொட்டும் பொதுமக்களுக்கு மாநகராட்சியால் அபராதமும் விதிக்கப்படுகின்றன என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளனர்.

**இந்நேர்வில், மனுதாரர் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர்களது வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.**

மனுதாரர் திரு. ரிச்சர்ட் ஆலன், தான் குடியிருக்கும் செம்பியம், பெரம்பூரில் உள்ள சங்கர மடம் தெருவில் எதிர் வீட்டுக்காரர் குப்பைகளை தெருவில் வைத்துவிட்டு செல்வதாகவும் மற்றும் சிலர் குப்பைகளை தெருவில் கொட்டுவதால் சுற்றுப்புற சூழல் கெடுவதாகவும், அதனை சரி செய்ய துப்புரவு பணியாளரிடம் கூறியபோது தன்னுடைய பணியை சரிவர செய்யாமல், வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் எனவே, தனது மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

2. மனுதாரர் தெரிவித்தவாறு பெரம்பூர் - செம்பியம் சங்கரமட தெருவில் தெருவில் சேரும் குப்பைகளை மாநகராட்சி வாகனம் மூலம் சேகரிக்கப்பட்டு பின்னர் அதனை தரம் பிரித்து அனுப்பப்படுகிறது என்றும் அங்குள்ள வீடுகளில் சேரும் குப்பைகளை சேகரித்து அதனை மாநகராட்சி வாகனம் மூலம் அகற்றப்படுவதாகவும் குப்பைகளால் ஏற்படும் கெடுதல்கள் குறித்து சங்கரமடம் தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஒலி பெருக்கி மூலம் மண்டல அலுவலகத்தால் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்படுகிறது என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6ன் செயற்பொறியாளர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

Tamil Nadu Urban Local Bodies Rules, 2023ல் திடக்கழிவுகளை எவ்வாறு அகற்றப்பட வேண்டும் என்றும் மாநகராட்சி ஊழியர்களுக்கான விதிமுறைகள் மற்றும் பொதுமக்களுக்காக அறிவுரைகள் பின்வரும் பிரிவு 392ல் குறிப்பிடப்பட்டுள்ளது:-

<u>**பிரிவு 392 Disposal of Solid waste:**</u>

1. Disposal of Solid waste- (1) It shall be the responsibility of the Municipality for collection, transportation, storing, processing and disposing of solid waste generated within the limits of a municipal area at a notified place by the council, within or outside of its limits, so as to keep the municipal area clean by creating suitable infrastructure facilities for solid waste management.
2. x x x
3. x x x
4. x x x
5. No person or owner or occupier of any land or building shall litter or deposit solid waste at any public place or open land and allow any filthy matter to flow on public places or open land, or deposit or otherwise dispose of the carcase or any part of dead animal at place not provided or specified for such purposes.
6. Every owner or person maintaining the open land or site shall keep such open land or site clean and free from any garbage, sewage and bushes so as to avoid mosquito breeding. The Commissioner shall give notice to clear the garbage or sewage, if any, on the open land or site within a reasonable time. If not done by the owner or person concerned, the Commissioner may arrange to clean the open land or site and levy fine and recover the cost involved therefor.
7. The Commissioner shall levy spot fine as may be determined by the council from time to time on the defaulter for littering any street or public place or throws or causes or permit to deposit any solid waste or waste from demolition of building at any place or permits the flow of any filthy matter from his peremises. Such fines may be collected by officers not below the rank of a Sanitary Inspector of the Municipality authorized in this behalf.
8. Spot fine shall be imposed on those who litters on the open sites, water bodies, streets and roads.
9. The Municipality shall organize door to door collection of segregated solid waste from the households, commercial establishments, institutions on regular pre-informed times and schedules.
10. Every owner or occupier of the building is responsible to segregate and store the solid waste in designated containers and keep neady for handing over to the waste collectors of the Municipality. The household hazardous waste shall be segregated and stored separately and handed over to the Municipality or agency authorized for handiling such waste.
11. The Municipality shall establish a system to recognize waste pickers or informal waste collectors, provide identity cards and thereafter encourage them for their participation in segregation and door to door collection of waste under solid waste management.
12. x x x

பெருநகர சென்னை மாநகராட்சி 28.5.2022 அன்று <u>"நம் குப்பை நமது பொறுப்பு"</u> என்ற தலைப்பின் கீழ் பொது அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில்:

சென்னை மாநகரை தூய்மையாக வைத்துக்கொள்ள பொதுமக்கள் தங்கள் வீட்டில் உருவாகும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை (Wet Waste, Biodegradable Waste and Dry Waste, Non-Biodegradable Waste) என வகைப் பிரித்து அவற்றை தினசரி வீடுதோறும் வரும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. தீங்கு விளைவிக்கக்கூடிய வீட்டின் அபாயகரமான குப்பையை (Domestic Hazardous Waste) வாரம் ஒருமுறை தனியாக பிரித்து வழங்குமாறு மாநகராட்சி கோரியுள்ளது.

இவ்வாறு பொது மக்களால் பிரித்து கொடுக்கப்படும் மக்கும் குப்பையை, குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு செல்லும் குப்பையின் அளவு பெருமளவு குறைக்கப்பட்டு சுற்றுப்புறத் தூய்மை மேம்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பொது மக்களின் சுகாதாரத்தை பேணி காக்கும் வகையில், பொது மக்களுக்கு மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான நடவடிக்கையினை எடுக்கும்படி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 6 மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது. மேலும், பொது மக்களின் சுகாதாரத்திற்கு உறுதி செய்யும் வகையில் துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை விதிகளை பின்பற்றுவது குறித்து அனைத்து மண்டல அலுவலர்களுக்கும் உரிய சுற்றறிக்கை அனுப்புமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. ரிச்சர்ட் ஆலன்,
12/12, சங்கர மடம் தெரு,
செம்பியம், பெரம்பூர்,
சென்னை - 600 011.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர், (சுகாதாரம்)
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 003.
4. மண்டல அலுவலர்,
மண்டலம் – 6, பெருநகர சென்னை மாநகராட்சி,
158, ஸ்டாரன்கன்ஸ் சாலை,
பட்டாளம், சென்னை – 600 012.
5. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
9/8/23.